1984 மார்ச் 28]

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தது 10 தொழில் முனைவர்கள் நல்ல தொழில் திட்டங்களின் கீழ் தொழில் தொடங்க முன் வந்தால், சிட்கோ மூலமாக அவர்களுக்காக சின்னஞ்சிறு தொழிற் கூடங்களைக் கட்டிக் கொடுக்க அரசு முயற்சி செய்யும்.

(முற்பகல் 9-50)

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் திருப்பனந்தாளில் 110 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு ஏறத்தாழ 15 ஆண்டுக் காலமாக அப்படியே இருக்கிறது. 5 ஏக்கர் நிலத்தில் மட்டும் சிறு தொழில்கள் துவங்கப்பட்டுள்ளன. மீதி ஏறத்தாழ 105 ஏக்கர் நிலம் அப்படியே இருக்கிறது. அந்த 105 ஏக்கர் நிலப்பரப்பில் சிறு தொழில்கள் துவங்க அல்லது ஒரு தொழிற்பேட்டையை உருவாக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி அரசு பரிசீலனைச் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2. தகவல் கோரல்.

துறைமுகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம்

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, துறைமுகத் தொழிலாளர்களின் ஸ்டிரைக் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படவில்லை. இது நம்முடைய அரசினுடைய நிர்வாகத்தில் இல்லாவிட்டாலும், அதில் தீர்வு ஏற்படாமல் இருப்பதால், நம்முடைய மாநிலத்தில் ஏராளமான தொழில்களுக்கு வரவேண்டிய ரா-மெட்டீரியல்ஸ் வரவில்லை. தொழில் துறையே ஸ்தம்பித்துப் போகும்படியான நிலை ஏற்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டினுடைய பல தொழில்களின் பொருளாதாரமும் பெரும் அபாயத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது.

அது மட்டும் அல்லாமல் லா அண்ட் ஆர்டர் பிராப்ளம் வரும்போது நம்முடைய அரசுதான் பொறுப்பு ஏற்க வேண்டும். அப்படி இந்த ஸ்டேட்டே பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிற போது, நம்முடைய அரசு இதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? பல மாநிலங்களில் இப்படிப்பட்ட நிலை ஏற்படும் போது, மாநில சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்தியிருக்கிறார்கள். நம்முடைய அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துறைமுக நிர்வாகம், bsolutely it is under the control of the Government of India. We have on jurisdiction.

திரு. ரா. உமாநாத்: நான் சொல்வது இன்னொரு கோணத்தில், அதனால், நம் மாநிலத்தின் தொழில் வளர்ச்சியே பாதிக்கப்படுகிறது. பொருளாதாரமே குன்றக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்களுடைய பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். இன்றைக்கு அந்தப் பிரச்சினையில் தீர்வு காணா விட்டால், லா அண்ட் ஆர்டர் பிராப்ளம் வரும். அப்போது நமக்குப் பொறுப்பு வருகிறது.

I am saying that our TamilNadu Government should not be silent.

இதற்கு சீக்கிரம் தீர்வு காண வேண்டும். அப்படி நம்முடைய அரசு இந்தப் பிரச்சினையில் என்ன செய்திருக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும் என்று கேட்கிறேன்.

Mr, Speaker: Any reply from the Government side.

திரு. ரா. உமாநாத்: ரிப்ளை இல்லை என்று சொல்லிவிட முடியாது. கவர்ன்மெண்ட் சைடிலே இதற்கு பொறுப்பு ஏற்க வேண்டும். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை முன்னவர் அவையில் தற்போது இல்லை. அவை முன்னவர் வந்ததும் வேண்டுமானால் அவரிடம் கேட்டு பிறகு சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள், இந்தத் துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம் பற்றி இங்கே சொன்னார்கள். எங்களுக்கும் அவரைப்போலவே, தொழிலாளர்கள் மீது அக்கறை, அன்பு, பாசம் எல்லாம் உண்டு.

1984 மார்ச் 28] (திரு. சு. முத்துசாமி)

எனவே, அந்த வகையில் உடனடியாக எவ்வளவு விரைவிலே முடியுமோ அந்த அளவுக்குப் பேசி பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற உணர்வை அரசின் சார்பாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். இன்றைக்குப் பேசுவது கூட மத்திய அரசினுடைய காதுக்கு நிச்சயமாக எட்ட இருக்கின்றது. வேண்டுமானால் அரசின் சார்பாக நிலைமைகளை, விளக்கி ஒரு கடிதத்தை எழுத நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம் :

விவசாயக் கல்லூரி மாணவர்கள் தொடர் உண்ணாவிரதம் இருப்பது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் சு. பாலன் த. வேணுகோபால், செ. இராமலிங்கம், கு. ரமணி, பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், தி. கா. நல்லப்பன், என். ஏ. பூங்காவனம், ஏ. டி. கருப்பையா, மு. அப்பாதுரை, பொ. உத்திராபதி, என்.எஸ்.வி. சித்தன், இல. பலராமன், எல். இளையபெருமாள், டி. மணி, என். பழனிவேல் ஆகியோர், ''மதுரை, கோவை மற்றும் அண்ணாமலை பல்கலைக் கழக விவசாயக் கல்லூரி மாணவர்கள் கடந்த சில நாட்களாக தொடர் உண்ணாவிரதம் இருப்பதால் ஏராளமான மாணவர்கள் மயக்கமுற்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதால், மாணவர் களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன்: அவைத் தலைவர் அவர்களே, கோவை மதுரை, அண்ணாமலை ஆகிய இடங்களிலே உள்ள விவசாயக் கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்கள் — 6 மாதம் டிப்ளமோ படித்து பாஸ் செய்தவர்கள் வேளாண்மைத் துறையிலே துணை அதிகாரிகளாக நியமிக்கப்படலாம் என்று உத்திரவிடப்பட்டிருக்கிறது—அந்த உத்திரவை ரத்து செய்ய வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை இந்த அரசு ஏற்றுக்கொள்ளாமையால் அங்கே 450க்கும் மேற்பட்ட மாணவர்கள் கடந்த இரண்டு நாட்களாக மதுரையிலே உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். உண்ணாவிரதம் இருந்தவர்கள்